# Motorcycle Diaries



என்பதுகளில் அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட போது அதென்ன பெயர் ‘சே’ என்றுதான் எல்லோரையும் போலக் கிண்டலடித்தேன். அவர் ஒரு புரட்சிக்காரன் என்று கேள்விப்பட்டபோது இன்னும் அதிகமாகக் கிண்டலடித்தேன் ஏனென்றால் அப்போதும் எனக்கு எம்ஜிஆரைப் பிடிக்காது. இங்கு எல்லாமே தலைகீழாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. அவன் தான் பிறந்த நாட்டுக்காகப் போராடாமல் இன்னொரு நாட்டுக்காகப் போரடியவன் என்பதையும், வெற்றியடைந்து ஒரு அரசமைத்து அதில் முக்கிய மந்திரியாக இருந்து அதையும் உதறிவிட்டு வேறு ஒரு நாட்டு விடுதலைக்காக காட்டுக்குப்போனான் என்பதைக் கேள்விப்பட்டதும் கொஞ்சம் ஆர்வம் கூடியது. அப்படி ஒரு நிஜப் புரட்சிக்காரனப் பற்றிய படம் தான் Walter Salles இயக்கிய ‘மோட்டார் சைக்கிள் டைரீஸ்’.

ஒரு பழையய நார்ட்டன் 500 இருசக்கர வாகனம், கொஞ்சம் உடமைகள், நிறைய உற்சாகத்தோடு இரண்டு இளைஞர்கள் புறப்படுகிறார்கள். இடம் அர்ஜெண்டினாவின் ஃபூனோ ஏர்ஸ், வருசம் 1953 ஜனவரி மாதம். இரண்டு பேரின் குடும்பத்தாரும் விடைகொடுக்க கிளம்புகிற வாகனம் தாய் தந்தையரின் கண்ணெதிரே ஒரு நான்கு சக்கர வாகனத்தோடு மோத இருந்து பதறவைத்து, நொடியில் சமாளித்து தப்பித்து கிளம்புகிறது வழிநெடுககும்மாளமும் உற்சாகமும் நிறைந்த பயணம். வாகனப் பயணத்தின் விதி மாறாமல் அந்தப்பழைய நார்ட்டன் பைக் பல இடங்களில் அவர்களின் காலை வாறுகிறது. நமது எதிர்பார்ப்பையும் சேர்த்து.

முதலில் உலகம் முழுக்க இப்போது பார்த்துக் கொண்டிருக்கிற நட்சத்திரம் பொறிக்கப்பட்ட தொப்பி, இளம் தாடி, தோளில் புரளும் முடியோடு சேகுவேரா காண்பிக்கப் படவேயில்லை. இரண்டாவது புரட்சிக்காரனின் மேலிருக்கிற இறுக்கமான மற்றும் மரியாதை கலந்த பிம்பமும் இல்லை. மொழு மொழுவென இருக்கும் சே வழிநெடுக பெண்களுக்காக அலைகிறான். குடிக்கிறான் பகிடி செய்கிறான். மெக்கானிக்கின் மனைவியை மோகித்து பிடிபட்டு விரட்டப்பட்டு ஓடுகிறான். கப்பலில் சீட்டு விளையாடி பணம் சம்பாதித்து அந்தப்பணத்தில் விபச்சாரியோடு பொழுது கழிக்கிறான். படம் முழுக்க மோட்டார் சைக்கிளும் பயணமும் மையக்கருவாக வரப் போவதில்லை என்பதை நாம் யூகிக்க முடிந்தாலும் நமது எதிர்பார்ப்பை உடைக்கிற கதை அமைப்புதான் அந்தப்படத்தின் வித்தியாசம். ஆமாம் ஒரு புரட்சிக்காரனைப் பற்றிய கதையில் ஏதாவதொரு இடத்தில் ஒரு சின்ன வன்முறைகூட காட்டப்படவேயில்லை. அட ஒரு பேனாகத்தி கூட காட்டப்படவேயில்லை என்றால் பாருங்களேன். சரி செய்ய முடியாத அளவுக்கு பழுதான மோட்டார்சைக்கிளை உதறிவிட்டு தென் அமெரிக்காவின் வறுமையை ஊடறுத்துக்கொண்டு தொடர்கிறது பயணம். சிலி, பெரு அட்டகாமா பாலைவனம், அனகோண்டா சுரங்க கழகம் அங்கே ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்த காரணத்துக்காக வீடு உடமைகள் பறிக்கப்பட்ட குடும்பத்தின் வறுமை, அங்கிருந்து மாச்சு பிச்சு, கூழ்க்கோ, இறுதியில் லிமா போய்ச் சேருகிறார்கள் அங்கேதான் மருத்துவர் ஒருவரின் சிபாரிசின் பேரில் சான் பாப்லோ தொழுநோய் மையத்துக்கு இருவரும் அனுப்பப்படுகிறார்கள். அமேசான் நதிக் கரையில் ஒரு கரையில் வசதியும், சுத்தமும், தொழுகையும் கட்டுப்பாடும் நிறைந்த மருத்துவர் மற்றும் செவிலியரின் இருப்பிடம். இன்னொரு கரையில் வறுமையும், அசுத்தமும், ஒழுங்குமற்ற கருப்பு தொழு நோயாளிகள் புகழிடம்.

ஆனால் இந்த இருவரும் மருத்துவ விதிகளையும், மதவிதிகளையும் மீறுகிறார்கள். ஆம் கையுறை இல்லாமல் நோயளிகளை அணுகுவது பிரார்த்தனைக்குச் செல்லாமல் சாப்பிடுவது போலான மீறல்களுக்காக மூத்த மருத்துவர்களால் கண்டிக்கப் படுகிறார்கள். ஆனால் கன்னியாஸ்திரிகளாலும் நோயாளிகளாலும் வெகுவாக நேசிக்கப்படுகிறார்கள். எர்னஸ்டோ சேகுவாராவின் 24 வது பிறந்த நாள் கொண்டாட்ட ஏற்புறையில் மெலிய குரலில் பேசுகிறான்.

**ஒரு புரட்சிக்காரனைப் பற்றிய கதையில் ஒரு பேனாக்கத்தி கூட காட்சிப்படுத்தப்படாமல் திரைப்படமாக எடுக்கப்பட்டிருப்பதை நம் தமிழ் சினிமா இயக்குனர்கள் கவனத்தில் எடுத்தல் சிறந்தது . . .**

கிறிஸ்தவ மத தொண்டு நிறுவன ஊழியர்கள் கன்னியாஸ்திரிகள் நிறைந்த அந்த சபையில் இந்த உலகம் பிளவு பட்டுக் கிடக்கிற அசமத்துவங்கள் குறித்துப்பேசுகிறான். தனது வாழ்நாளின் எஞ்சிய பகுதியை அந்த சமூகத் தொழு நோயிலிருந்த விடுவிக்கிற மருத்துவம் செய்யப்போவதாக அறிவிக்கிறான் பலத்த கரகோசத்துக்கும் வரவேற்புக்கும் மத்தியில். சே அங்கிருந்து கிளம்புகிற கட்சிகளோடு படம் முடிகிறது.

அவனது நண்பன் சேகுவேராவை அதற்குப்பிறகு ஹவானாவில் ஒரு மந்திரியாகத்தான் பார்த்தேன் என்ற பிண்ணனியில்சொல்லிக்கொண்டிருக்கும்போதே இந்த உண்மைப் பயணத்தின் கருப்பு வெள்ளைப் புகைப்படங்களும் இந்தப் படத்தின் காட்சிகளும் மாறி மாறிக்காட்டப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு வெளிவந்து பெரும் விவாதங்களைக்கிளப்பிய படமான ‘ தி சிட்டி ஆஃப் காட்’ எனும் படத்தை இயக்கியவால்டர் சேல்ஸ் தான் இந்தப்படத்தின் இயக்குனர். முன்னதாக சேகுவேராவும் அவரது நண்பர் அல்பெடோ க்ரெனடாவும் எழுதிய நாவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படத்தின் கதைவசனம் ஜோஸ் ரிவேரா. சின்னத்திரையில் பிடல் காஸ்ட்ரோவாக நடித்த காயல் கார்சியா பெர்னல் சேகுவேராவாகவும், நிஜ வழ்க்கையில் மைத்துனரான ரோட்ரிகோ லா செர்னா நண்பனாகவும் நடித்து வெளிவந்த ஸ்பானியத் திரைப்படம் தான் இந்த “ மோட்டார் சைக்கிள் டைரீஸ் ” திரைப்படம்.

*– காமராஜ்*

# சினித்துளி

## நடிகர் ராஜன் பி தேவ் காலமானார்.



எல்லா படத்திலேயும் வில்லனாக வந்து வயிற்றிலே புளி கரைக்கும் ராஜன் பி தேவ், தனது ரசிகர்களை கவலை கடலில் தள்ளிவிட்டு இயற்கை எய்திவிட்டார். அவர் கடைசியாக நடித்து தமிழில் வெளிவந்த படம் மலையன். சூரியன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் ராஜன் பி தேவ். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் சுமார் 520 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். கடந்த வாரத்தில் மிக ஆபத்தான நிலையில் எர்ணாகுளத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ராஜன்.பி.தேவ் தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் இயற்கை எய்தினார். கேரள திரையுலகை சேர்ந்த ஏராளமானோர் அவருக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.

## தெலுங்கிலும் நாடோடிகள்.



நாடோடிகளின் சூப்பர் டுப்பர் ஹிட் தமிழ் சினிமாவையே புரட்டி போட்டு விட்டது. இந்தப் படத்தில் சசிகுமாரும் அனன்யாவும் நடித்திருந்தார்கள். இந்தப் படத்தை சமுத்திரக்கனி இயக்கி இருந்தார். இந்தப்படத்தின் வெற்றியையும் கலெக்ஷனையும் பார்த்த தெலுங்கு தயாரிப்பாளர் பெல்ல கொண்டா ‘நாடோடிகள்’ படத்தின் தெலுங்கு உரிமையை எக்கச்சக்கமான தொகையைக் கொடுத்து வாங்கிவிட்டார். சசிகுமார் தமிழில் நடித்த அதே கதா பாத்திரத்தில் ரவிதேஜா நடிக்கிறார். படத்திற்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை. இந்தப் படத்தை தமிழில் இயக்கிய சமுத்திரக்கனி தான் தெலுங்கிலும் இயக்குகிறார்.

## இந்தியில் “சயனைடு”.



ராஜீவ் காந்தியை கொன்ற கொலையாளிகளின் இறுதி நிமிடங்களை சயனைடு என்ற பெயரில் கன்னடத்தில் திரைப்படமாக எடுத்தவர் ஏ.எம்.ஆர்.ரமேஷ். இந்தப் படம் குப்பி என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு பெரும் வரவேற்பை பெற்றது. குப்பி படத்தில் உண்மைக்கு நெருக்கமாக காட்சிகளை உருவாக்கியிருந்தார் ரமேஷ். தற்போது, பாபர் மசூதி இடிப்பின்போது பெங்களூருவில் நடந்த உண்மைச் சம்பவத்தை காவலர் குடியிருப்பு என்ற பெயரில் எடுத்து வருகிறார் ரமேஷ். இந்தப் படம் முடிந்ததும் இந்தியில் சயனைடு படத்தை அதே பெயரில் ரீமேக் செய்கிறார். சபனா ஆஸ்மி, ரவிகாலே போன்றவர்கள் அதில் நடிக்கிறார்கள். சயனைடு இந்தியில் பரபரப்பை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்பலாம்.

## கந்தசாமி - கவலையில் கமல்.



உன்னைப் போல் ஒருவன் படத்தை இம்மாதம் ரிலீஸ் செய்வதாக இருந்தார் கமல். அங்குதான் பிரச்சனை உருவாகியது. கந்தசாமி திரைப்படத்தை தமிழகத்தில் மட்டும் 600 தியேட்டர்களை வாடகைக்கு எடுத்து வெளியிட இருக்கிறார் தயாரிப்பாளர் தாணு. 600 தியேட்டர்கள் கந்தசாமிக்கு போய்விட்டால் தான் என்ன செய்வது என்ற கொதியில் இருக்கிறார் கமல். தியேட்டர்கள். வசதி குறைந்த தியேட்டர்கள் கிடைத்தாலும் பரவாயில்லை என்று களத்தில் இறங்கினால், கூடவே வருகிற நாடோடிக் கும்பல் எடுக்கிற சில படங்கள் அதையும் பங்கு போட்டுக் கொள்ளும் சூழல் உருவாகியிருக்கிறது. ஆக, உன்னை போல் ஒருவன் இப்போதைக்கு ரிலீஸ் ஆகுமா ? அது தான் கமலையும், கமல் ரசிகர்களையும் உறுத்திக் கொண்டிருக்கும் பெரும் கேள்வி! *ரொம்ப முக்கியம்*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**